(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 106.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2024 ஜனவரி 24, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

426/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தெங்குக் கைத்தொழிலை கட்டியெழுப்புவதற்காக தாபிக்கப்பட்டுள்ள அரச நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) இலங்கையின் வருடாந்த தெங்கு உற்பத்தியில் வீட்டு நுகர்வு, தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் போன்ற ஒவ்வொரு துறைக்காகவும் பயன்படுத்தப்படுகின்ற அளவு தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) 2001ஆம் ஆண்டு தொடக்கம் 2020ஆம் ஆண்டு வரை, ஒவ்வோராண்டிலும் இலங்கையின் தெங்கு விளைச்சல் தேங்காய்களின் அடிப்படையில் தனித்தனியாக யாது என்பதையும்;

(iv) தெங்கு விளைச்சலை அதிகரிக்க, மேற்கூறிய காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் யாவை என்பதையும்;

(v) அந்நிகழ்ச்சித் திட்டங்களுக்காக செலவிடப்பட்ட தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

436/2023

கௌரவ புத்திக பத்திரண,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) ஒரு கிலோகிராம் நிறையுடைய முழு ஆடைப் பால்மா மற்றும் ஆடைநீக்கிய பால்மா பக்கெட் ஒன்றும் 400 கிராம் நிறையுடைய முழு ஆடைப் பால்மா மற்றும் ஆடைநீக்கிய பால்மா பக்கெட் ஒன்றும் —

(i) விற்பனை செய்யப்படும் விலை;

(ii) அவற்றைப் பயன்படுத்தி தயார் செய்யக்கூடிய பால் லீற்றர்களின் அளவு;

(iii) அவற்றைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் திரவப்பால் லீற்றர்களின் அளவு;

ஒவ்வொரு கம்பனியின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கையில் விற்பனை செய்யப்படுகின்ற திரவப்பால் பக்கெட்களின் கொள்ளளவு மற்றும் மேற்படி கொள்ளளவுக்கு அமைய ஒவ்வொரு திரவப்பால் பக்கெட்டின் விலை என்பன தனித்தனியே யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

694/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு, மட் / பட் / குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயம் தற்போது பிரதான வீதியில் அமைக்கப்பட்டிருப்பதோடு, அந்தப் பாடசாலை முன்னர் அமைந்திருந்த இடத்தில் காணப்பட்ட விளையாட்டு மைதானத்தின் ஒரு பகுதி இன்றளவில் இலங்கை இராணுவத்தின் பொறுப்பில் உள்ளது என்பதையும்;

(ii) அதனால், விளையாடுவதற்காக அந்த மைதானத்தைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இலங்கை இராணுவத்திடமிருந்து மேற்படி விளையாட்டு மைதானத்தை விடுவிக்க எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) கிழக்கு மாகாணத்தில், இராணுவத்தின் பொறுப்பில் மேலும் விளையாட்டு மைதானங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவற்றின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iv) இலங்கை இராணுவத்திடமிருந்து அத்தகைய விளையாட்டு மைதானங்களையும் விடுவிக்க எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4.

826/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வருடமொன்றில் உற்பத்தி செய்யப்படுகின்ற மரக்கறிகளின் அளவு மெற்றிக் தொன்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) வருடாந்தம் நுகரப்படுகின்ற மரக்கறிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மரக்கறி உற்பத்தியில் மிகை அல்லது குறை காணப்படுமாயின், அந்த அளவு யாது என்பதையும்;

(iv) 2015 – 2019 வரையான காலப்பகுதியிலும் 2019 முதல் 2021 வரையான காலப்பகுதியிலும் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறிகளின் அளவு தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

839/2023

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மேல் மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில் ஆசிரியர்களின் மிகை மற்றும் பற்றாக்குறை நிலவுகின்ற கல்வி வலயங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி மிகையாகவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் பற்றாக்குறையாகவுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வொரு பாடத்தின் பிரகாரம் யாதென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

853/2023

கௌரவ காமினி வலேபொட,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) இலங்கை அரசியலமைப்பிற்கான பதின்மூன்றாவது திருத்தத்திற்கு அமைவாக மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் அளிக்கப்பட வேண்டுமென தற்போதைய அரசாங்க முக்கியஸ்தர்கள் தெரிவித்துள்ளார்கள் என்பதை அறிவாரா;

(ii) தற்போது மத்திய அரசாங்கத்தின் வசமுள்ள பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு அளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) இதன் காரணமாக தற்போது இலங்கை பொலிஸார் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களுக்கு உறப்படும் செலவுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமா;

(iv) ஆமெனில், அவ்வாறு திருத்தப்படும் நிதித்தொகை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதனால் தற்போதுள்ள இலங்கை பொலிஸ் ஆட்சேர்ப்பு நடைமுறையில் ஏற்படும் மாற்றங்கள் யாவை;

(ii) மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதனால் ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கான தத்துவம் நேரடியாக மாகாண பொலிஸாருக்கு உரித்தாகுமா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

874/2023

கௌரவ ரோஹண பண்டார,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள மீன் இனப்பெருக்க நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மீன் இனப்பெருக்க நிலையங்களை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1718/2023

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இந்நாட்டுக்குக் கிடைத்த வெளிநாட்டு பணவனுப்பல்களின் பெறுமதி ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இப்பெறுமதியானது மொத்த அந்நியச் செலாவணி ஈட்டல்களின் சதவீதமாக மேற்படி ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இலங்கைக்கான வெளிநாட்டு பணவனுப்பல்கள் சட்டபூர்வமான வழிமுறைகள் ஊடாக மேற்கொள்ளப்படுவதனை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

2020/2023

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் மஹபொல பயிற்சி நிறுவகம் (மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலை) இயங்கிவருகின்றது என்பதை அறிவாரா;

(ii) மேற்படி நிறுவகத்தினால் தற்போது நடாத்தப்பட்டு வருகின்ற பாடநெறிகளின் எண்ணிக்கை யாது;

(iii) அவ் ஒவ்வொரு பாடநெறிகளும் யாவையென்பதையும்;

(iv) இலங்கையின் எதிர்கால பொருளாதார அபிவிருத்திக்கு மேற்படி நிறுவகம் எவ்வாறு பயன்படுத்தப்படும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

3799/2023

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ (i) ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் கடுகன்னாவையிலிருந்து கம்பளை வரை மின்சார புகையிரதப் பாதையொன்றினை நிர்மாணிப்பதற்கு இலங்கை புகையிரத திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதா;

(ii) மேற்படி புகையிரதப் பாதையை நிர்மாணிக்கையில் கம்பளை, உடபலாத்த பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கஹட்டபிட்டிய மற்றும் போத்தலபிட்டிய கிராமங்களின் குடியிருப்பாளர்கள் பயன்படுத்தும் தேவராஜ வீதியை உள்ளிட்ட ஏனைய உட்பிரவேச வீதிகள் இழக்கப்படும் அபாயம் காணப்படுவதை அறிவாரா;

(iii) மேற்படி குடியிருப்பாளர்களின் வீடுகள், மகாவலி கங்கைக்கு அருகில் 4, 6 பேர்ச்சஸ் போன்ற சிறிய காணித் துண்டுகளில் அமைக்கப்பட்டுள்ளமையினால், அவர்களது வீடுகள்/சொத்துகள் மற்றும் உட்பிரவேச வீதிகளுக்கு சேதம் ஏற்படாதவாறு, மேற்படி பாதையை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா;

(iv) ஆமெனில், இது சார்பில் முன்வைக்கப்படும் முன்மொழிவுகள் யாவை;

(v) இது தொடர்பில் முன்வைக்கப்படும் மாற்று முன்மொழிவுகள் குறித்து ஆராயப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— பிரிவிடல் (திருத்தம்),— 1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பிரிவிடல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.00 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 6.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 5 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

4.

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல,— சிறப்புரிமை,— தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க அவர்கள் 2023 நவம்பர் 07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 இன் ஏற்பாடுகளின் கீழ் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2024 பெப்ரவரி 06 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2024 ஜனவரி 23) [1].

*2.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூன் 01 ஆம் திகதிய 2334/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.12.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 நவம்பர் 01 ஆம் திகதிய 2356/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 டிசம்பர் 20 ஆம் திகதிய 2363/26 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

5.

பா. 83/2024

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ வடிவேல் சுரேஷ்

கௌரவ லசந்த அலகியவன்ன

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— மாத்தறை மாவட்டத்தில் நில்வளா கங்கையை உள்ளிட்ட நீர் மூலங்களின் காரணமாக எழுந்துள்ள பிரச்சினைகளை ஆழமாக ஆராய்ந்து புதிய புனர்நிர்மாண முன்மொழிவுத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்குப் பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு,— மாத்தறை மாவட்டத்தின் கொங்கல மற்றும் இரக்வானை மலைத்தொடரைச் சார்ந்ததாக ஊற்றெடுக்கும் நில்வளா கங்கை மற்றும் கிங் கங்கை ஆகியன முறையே மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களூடாகப் பாய்ந்து கடலுடன் சங்கமிக்கின்ற அதேவேளை பொல்வத்த கங்கையும் இதற்கிணையான முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நீர் மூலம் என்பதாலும்;

இக் கங்கைகளின் நீர் முகாமைத்துவம் மற்றும் வெள்ள முகாமைத்துவம் தொடர்பில் முதன் முதலில் ஒல்லாந்தர் ஆட்சியின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் சுதந்திர இலங்கையில் கிங் மற்றும் நில்வளா ஆகிய கங்கைகளின் நீரை தென்கிழக்கிலங்கை எனப்படும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தைப் போஷிப்பதற்காக பயன்படுத்துவது பற்றிய ஆரம்பப் பிரேரணையை அப்போது அக்குரெஸ்ஸ தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த டாக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்ஹ அவர்கள் 1950களில் சமர்ப்பித்திருப்பதாலும்;

கிங் மற்றும் நில்வளா ஆகிய கங்கைகளின் நீரை முகாமை செய்தவாறு வருடாந்தம் ஏற்படுகின்ற வெள்ள நிலைமையை முகாமைத்துவம் செய்து அந்த நீரை இரு மாவட்டங்களிலுமுள்ள மக்களது தேவைகளுக்கும், விவசாயம் மற்றும் கைத்தொழிற்சாலை செயற்பாடுகளுக்கும், உயிரினப் பல்வகைமை மற்றும் சுற்றுச் சூழல் சமநிலையை பேணிச் செல்வதற்கும் முறையாகப் பயன்படுத்துவது தொடர்பில் பல்வேறு துறைசார் நிபுணர்களினால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாலும்;

1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நில்வளா கங்கையை அண்டியதாக வெள்ளப்பெருக்கைத் தடுப்பதற்கான கருத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்ட போதிலும், 1987 – 1989 காலப்பகுதியில் நாட்டில் காணப்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக அத் திட்டம் இடைநடுவே நிறுத்தப்பட்டதால் நில்வளா கங்கையை அண்டியதான விளைநிலங்கள் தரிசு நிலங்களாக மாறியதோடு, வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தல் தொடர்ந்தும் காணப்படுவதால் வறட்சிக் காலத்தில் உவர் நீர் நில்வளா கங்கையின் ஊடாக மேல் நோக்கிப் பாய்ந்தோடி குடி நீரிலும் விளைநிலங்களிலும் கலந்தமையினால் பாரதூரமான பிரச்சினைகள் ஏற்பட்டன. அத்துடன் இதன் பொருட்டு செயற்படுத்தப்பட்ட நில்வளா உவர் நீர் தடுப்பணை காரணமாக இன்றளவில் வெள்ள நீர் தொடர்ந்தும் விளைநிலங்களில் தேங்குவதால் நெல், கறுவா, மரக்கறி, தெங்கு மற்றும் இதர பயிர்ச் செய்கை நடவடிக்கைகளும் பாற் பண்ணையாளர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்ற மோசமானதொரு நிலைமை ஏற்பட்டுள்ளதாலும்,

கிங் கங்கையை அண்டியதான உவர் நீர் தடுப்பணை வெற்றியளித்ததோடு, நில்வளா கங்கையை அண்டியதான உவர் நீர் தடுப்பணை பலனளிக்காமை தொடர்பாக ஆழமாக பகுப்பாய்வு செய்ய வேண்டிய நிலைமை தோன்றியுள்ளதாலும்,

(அ) சுதந்திர இலங்கையின் சுமார் 7 1/2 தசாப்த காலப்பகுதியில் கிங் கங்கை மற்றும் நில்வளா கங்கை தொடர்பாக அறிஞர்களும் துறைசார் நிபுணர்களும் மேற்கொண்ட ஆய்வுகள் குறித்து ஆழமாக பகுப்பாய்வு செய்து அவர்களது முன்மொழிவுகளிலுள்ள காத்திரமான இயல்புகளை இனங்காண்பதற்கும்;

(ஆ) நில்வளா மற்றும் கிங் ஆகிய கங்கைகளின் மேல் படுகையின் மேலதிக நீரை தென்கிழக்கிலங்கைக்குக் கொண்டு செல்வது தொடர்பில் விஞ்ஞானபூர்வமானதும் மக்கள் வாழ்வுக்கு குறைந்தபட்ச பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலானதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முறையியல்கள் தொடர்பாக நடைமுறைச் சாத்தியமான வேலைத்திட்டமொன்றை உருவாக்குவது பற்றிய முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) மேற்படி (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டத்தை இதற்கு முன்னர் செயற்படுத்தியமையுடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்/ செலவிடப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளின் உற்பத்தித்திறன் தொடர்பாக ஆழமான விசாரணையினை மேற்கொள்வதற்கும்;

(ஈ) நில்வளா உவர் நீர் தடுப்பணை காரணமாக ஏற்பட்டுள்ள அனைத்து விதமான பாதிப்புகளையும் நீக்குவதற்கு மேற்கொள்ளக்கூடிய துரித குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்துவதற்கான விதப்புரைகளை வழங்குவதற்கும்;

(உ) மாவட்டத்திலுள்ள நீர்ப் பாவனையாளர்களையும் எதிர்காலத்தில் விரிவுபடுத்தக்கூடிய நீர் கருத்திட்டங்களுக்காக திகிலி ஓயாவை உள்ளிட்ட பிரதேசங்களில் பொருத்தமான புதிய நீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதையும் அடையாளங் காண்பதற்கும், தற்போது செயற்பாட்டிலுள்ள நீர்ப் பம்பி நிலையங்கள் தொடர்பில் விஞ்ஞான அடிப்படையிலான பகுப்பாய்வினை மேற்கொண்டு புதிய மூலோபாயங்களை முன்மொழிவதற்கும்;

(ஊ) நில்வளா கங்கையை அண்டியதாக இடம்பெற்றுவரும் முதலை – மனித மோதல் தொடர்பில் நிலைபேறான தீர்வினை வழங்குவதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கும்;

(எ) தென் மாகாணத்தில் கைத்தொழில், கமத்தொழில், நீர் மின்னுற்பத்தி, கால்நடை வளர்ப்பு மற்றும் ஏனைய மனித செயற்பாடுகள் மற்றும் உயிரினப் பல்வகைமையைப் பாதுகாத்தவாறு நில்வளா மற்றும் கிங் கங்கைகளின் நீர் கடலுடன் சங்கமிக்க முன் உச்சப் பயனுடன் அதனைப் பயன்படுத்துவது தொடர்பில் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(ஏ) வெள்ளத் தடுப்பு அபிவிருத்திக் கருத்திட்டமொன்றிற்கு அப்பால் சென்று கிங் – நில்வளா துரித பல்நோக்குத் திட்டத்தினூடாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கும் குறித்த நீர் மூலங்களை போக்குவரத்து, நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில், சுற்றுலாத்துறை மற்றும் கலாசார விழிப்புணர்வுக்காக பயன்படுத்துவதற்கான புதிய ஆக்கபூர்வமான அணுகுமுறைகளை அடையாளங் காண்பது தொடர்பான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கும்;

(ஐ) கிங், நில்வளா மற்றும் பொல்வத்த கங்கைகளைச் சார்ந்ததாக அக்கங்கைகளுடன் இணையும் கிளை ஆறுகள் / ஓடைகள் மற்றும் அவ்வாறான நீர்நிலைகளை அண்டியதாகவும், ஆற்றுப்படுகைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திச் செயற்பாடுகளை இனங்காணல், அக்கங்கைகளின் இருபுறமும் ஒதுக்குக் காடுகளை உருவாக்கல், கழிவுகள் ஒன்றுசேர்வதை தடுத்தல், மனித செயற்பாடுகள் மூலம் கங்கைகளின் நீரை மாசுறச் செய்யும் வழிமுறைகளை மறுதலித்தல், அனுமதியற்ற கட்டட நிர்மாணங்கள் மூலம் நீராதாரங்களுக்கு தடையேற்படுதல் மற்றும் சில மின்னுற்பத்தி நிலையங்களினால் கங்கைகளுக்கும், உயிரினப் பல்வகைமைக்கும் ஏற்படும் பாதிப்புகளை இனங்கண்டு அந்த நிலைமைகளை மறுதலிப்பதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கும்;

(ஒ) மேற்குறிப்பிட்ட கங்கைகளுடன் தொடர்புடையதாக இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முழுமை பெறாத பணிகளை இனங்கண்டு, அப்பணிகளை மேற்கொள்வதற்குரிய முன்மொழிவுகளைத் தயாரித்தல், இக்கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தொடர்பாக தடயவியல் கணக்காய்வு உட்பட பொருத்தமான நடவடிக்கைகளை தேவையான சந்தர்ப்பங்களில் முன்மொழிவதற்கும்; மற்றும்

(ஓ) மேலே (ஐ)இல் குறிப்பிடப்பட்டுள்ள கங்கைகளுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள், இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் வெற்றியளிக்காத நடவடிக்கைகள் தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து, குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுகின்றது.

2. (அ) குழுவின் தவிசாளரும் அதன் உறுப்பினர்களும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழுவானது இருபது (20) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேற்படி விடயங்கள் தொடர்பில் விரிவான ஆய்வினை மேற்கொள்வதற்காக குழு அவசியமென தீர்மானிக்கும் வகையில், குழுவின் முன் தோன்றுமாறு எவரேனும் ஆளை அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்து மூலமாகவோ, வாய்மூலமாகவோ பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், கூடுவதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழுவானது அதனது முதல் கூட்டத்திலிருந்து மூன்று (03) மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படும் அத்தகைய மேலதிக ஒரு காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்கு அதன் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

*6.

பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

காலவிதிப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டுகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

ஈட்டுச்சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

நிதி குத்தகைக்கு விடுதல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

கம்பனிகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

ஆவணங்கள் பதிவுக் கட்டளைச்சட்டம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 52(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 71 ஆம் பிரிவின் கீழ் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஒக்டோபர் 25 ஆம் திகதிய 2355/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.12.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 61 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சட்டத்தின் 60 ஆம் பிரிவின் கீழ் பிரதம நீதியரசரின் ஒருமைப்பாட்டுடன் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2021 யூலை 30 ஆம் திகதிய 2238/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 61 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சட்டத்தின் 60 ஆம் பிரிவின் கீழ் பிரதம நீதியரசரின் ஒருமைப்பாட்டுடன் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 26 ஆம் திகதிய 2303/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் பிரதம நீதியரசரின் ஒருமைப்பாட்டுடன் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 டிசம்பர் 14 ஆம் திகதிய 2362/67 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*24.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*25.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

கடற்றொழில் அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட சீ நோர் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2018),— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிச் சட்டத்தின் 131 ஆம் பிரிவின் கீழ் 2023.01.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட சீ நோர் நிறுவனத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.22 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*28.

கடற்றொழில் அமைச்சர்,— இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில்துறை கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(1) ஆம் பிரிவின் கீழ் 2022.11.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.22 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*29.

கடற்றொழில் அமைச்சர்,— இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2020),— 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் 2023.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.07.06 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.08.09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

30.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

சத்திய ஶ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

இலங்கை வரைதல் தொழினுட்பவியலாளர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---